செ.வெ.எண்:13 நாள்:12.11.2020

# பத்திரிக்கைச் செய்தி.

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரைகளின் படி, வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க திருத்தம் -2021 பணிகள், 16.11.2020 முதல் 15.12.2020 முடிய நடைபெற உள்ளது. அரியலூர் மாவட்டத்தில் அடங்கியுள்ள 149.அரியலூர் மற்றும் 150.ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் எதிர்வரும் 21.11.2020, 22.11.2020 மற்றும் 12.12.2020, 13.12.2020 ஆகிய நான்கு தினங்களிலும் 01.01.2021-ஐ தகுதி நாளாக கொண்டு 18 வயது நிரம்பிய நபர்களை (31.12.2002 அன்றோ அல்லது அதற்கு முன் பிறந்தவர்கள்) வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதற்கும் மற்றும் வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர் நீக்கம், பெயர் திருத்தம் மற்றும் முகவரி மாற்றம் செய்வதற்கான சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளது. பொதுமக்கள் மேற்கண்ட நாட்களில் நடைபெறும் சிறப்பு முகாம்களில் கலந்து கொண்டு பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**